கொண்டே வந்தால் காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தால் 1977 ஆம் ஆண்டு வழக்கமான மொபெட் உற்பத்தி தமிழ் நாடு மொபெட் என்ற பெயருடன் துவங்கப்பட்டது. நிதி நிலை, இடவசதி மற்றும் பல காரணங்களினால் பெருவாரியான உற்பத்தியைத் துவங்க இயலவில்லை. எனவே, இக்கால கட்டத்தில் தனியார் நிறுவனம் மொபெட் உற்பத்தியில் மிகப் பெரிய அளவில் நவீன தொழில் நுட்ப வசதிகளோடு உற்பத்தி செய்யப்பட்ட வண்டிகள் சந்தையில் விற்பனைக்கு வந்துவிட்டன. இதனால் இவை அப்போது நிறுத்திவைக்கப் பட்டுவிட்டது என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் யாராவது மேற்படி நிறுவனத்தைத் துவங்க முன்வந்தால் அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிறுவனம் இப்போது மாநில பொறியியல் மற்றும் சேவை நிறுவனம் தமிழ்நாடு என்ற புதிய பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் கேஸ் அடுப்பு, உதிரி பாகங்களை இணைப்பது இயந்திரங்களை இணைத்துக் கொடுப்பது போன்ற மூன்று விதமான பணிகளைச் செய்து வருகிற காரணத்தால் இது போன்ற திட்டம் எதையும் இப்போது பரிசீலிக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

46—

விருத்தாசலம் நகரில் விளையாட்டுத் திடல் அமைத்தல்.

*9499—திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் மாணவ, மாணவியர் விளையாட்டுப் பயிற்சிக்காக விளையாட்டுத் திடல் (Stadium) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.